**இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1996 இன் 26 ஆம் இலக்க புத்தஸ்ரவக பிக்கு பல்கலைக்கழக சட்டத்தின் 46 ஆவது பிரிவுடனும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை | 03 மாதங்களில் முதிர்வடைய | சரியான பொதுத்துறை |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீட்டு நியமம் 2 இன் 9 ஆம் பந்தியின் பிரகாரம் 03 மாதங்களில் முதிர்ச்சியடைய உள்ளதும் காசு மற்றும் காசிற்கு சமமானவையாக வெளிப்படுத்தப்பட வேண்டியதுமான ரூபா 13,806,343 பெறுமதியான நிலையான வைப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களின் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | உள்ள நிலையான வைப்புக்கள் ஆராய்ச்சி நிதியம், வெகுமதி நிதியம் மற்றும் மஹோபத்யா நிதியம் போன்ற குறித்துரைக்கப்பட்ட நோக்கமொன்றிற்காக பேணப்படும் நிதியங்களில் உள்ள முதலீடுகளை உள்ளடக்குகின்றது, இந்த நிலையான வைப்புக்களை பொது நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1 இன் 76 ஆம் பந்தியில் உள்ள (ஈ) பிரிவின் பிரகாரம் இது நடைமுறையல்லாத சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமம் இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் மூலம் வேண்டப்பட்டவாறு நிதியல்லாத சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்காததுடன் ரூபா 92,177,529 கிரயமான 08 சொத்து உருப்படிகள் 2021 திசெம்பர் 31 அளவில் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டு மேலும் பயன்பாட்டில் உள்ளன. அதன் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட பிழை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | இதுவரை, முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை மீளாய்வு செய்வது தொடர்பான கொள்கை அமுலுப்படுத்தப்பட்டிருக்காததுடன் தற்போதுள்ள வளங்கள் பற்றாக்குறையால் அத்தகைய கொள்கையை அமுல்ப்படுத்துவது நடைமுறையில் கடினமாக உள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில் ஒரு நிபுணர் குழு மற்றும்/ அல்லது விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் உதவியுடன் அவற்றின் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்கால கொடுப்பனவு கடப்பாட்டை கொண்டிருக்காத ரூபா 313,806,708 விசேட நிதிகள் மற்றும் ரூபா 17,030,262 நன்கொடையை பொது நிதிக்கு செலவு வைப்பதற்குப் பதிலாக அவை அத் திகதியிலுள்ளவாறு | இந்த தவறு 2022 ஆம் ஆண்டில் சீர்செய்யப்படும். | இந்த தவறை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறையல்லாத பொறுப்புக்களாக வெளிப்படுத்தப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | 2019 நவம்பர் 25 ஆம் திகதிய 09/2019 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் இல்லங்களிற்கு உரித்துடைய உத்தியோகத்தர்களிடமிருந்து சம்பளத்தில் 10 சதவீதம் அறவிடப்பட வேண்டிய போதிலும் பிக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் பதிவாளர் பதவிகளுக்கு ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 310,788 தொகை அறவிடப்பட்டு கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. ஆகையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறைச் சொத்துக்கள் முறையே அதே தொகையால் அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. | இவ் உத்தியோகபூர்வ விடுதிகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய மாதாந்த வாடகையை வீட்டுக் குழு தீர்மானித்திருக்கவில்லை. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் வழங்கப்படாத இடம் மற்றும் வசதிகளை பரிசீலித்த பின்னர் வீட்டுக் குழுவால் அறவிடப்பட வேண்டிய வீட்டு வாடகை தீர்மானிக்கப்படும். அதன் பின்னர் வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வாடகை நிலுவைகளை அறவீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பல ஆண்டுகளாகப் பெறப்பட்ட 1977 நூலகப் புத்தகங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | நூலகர் நிதிப் பிரிவுக்கு அறிவித்திருந்த அனைத்து நன்கொடையளிக்கப்பட்ட புத்தகங்களும் 2021 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2021 திசெம்பர் 31 இற்குப் பின்னர் இனங்காணப்பட்ட புத்தகங்களின் பெறுமதி 2022 ஆம் ஆண்டின் கணக்குகளில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்காத புத்தகங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கிற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய | ஒவ்வொரு நிறுவனத்திலும் நிதிக் கட்டுப்பாட்டிற்காக | பல்கலைக்கழகத்தின் நிதிக் கட்டுப்பாடு | தேசிய கணக்காய்வு சட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்காய்வு சட்டத்தின் 38 (1) மற்றும் 38 (2) ஆம் பிரிவுகள். | ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் காணப்படுவது உறுதிசெய்யப்பட்டு அத்தகைய முறைமைகளின் செயற்திறனைக் கண்காணிப்பதற்கு கால ரீதியாக மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதன் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்பாக காலாண்டு ரீதியாக முன்னேற்ற மீளாய்வு மேற்கொள்ளப்படும். | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயம்<br>-------------------------------- | | | |
| (i) | 5.2.1 ஆம் பிரிவு | பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினரில் 39 பிக்குகளுக்கு வீட்டு வசதிகளை வழங்கியதற்காக சம்பளத்தில் 7.5 சதவீத மாதாந்த வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டிய போதிலும் ஒவ்வொரு பிக்குவிடமிருந்தும் ரூபா 500 வாடகை அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறைத்து அறவிடப்பட்ட வீட்டு வாடகை ரூபா 2,354,348 ஆகும். | 2020 திசெம்பர் 09 ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் வழங்கப்படும் வசதிகளைக் கருத்தில் கொண்டு வாடகை அறவிடப்பட வேண்டியதால் அது வீட்டுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டு அதன் பின்னர் வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளிற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 5.8 ஆம் பிரிவு | பல்கலைக்கழக உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்ட 06 இல்லங்களிற்கான மின்சாரம், நீர் மற்றும் | விரிவுரையாளர் விடுதிகள் மற்றும் துறைத் தலைவர்கள் தங்கும் விடுதிகளின் மின்சாரம் மற்றும் | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொலைபேசிக் கட்டணங்களாக ரூபா 1,544,243 கூட்டுமொத்த தொகை பல்கலைக்கழக நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | தண்ணீர் செலவினங்களை நிர்ணயிக்க முடியாததால், பெயரளவு பெறுமதியை நிர்ணயிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு, அதன் பிரகாரம் 2017 மே 05 இல் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் புதிய கட்டணமாக ரூபா 500 ஐ அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் அந்த குடியிருப்பில் வசிப்பவர்களிடம் இருந்து தனியாக தண்ணீர் கட்டணம் மற்றும் மின்சார கட்டணங்களை அறவிட முடியாதிருந்தது, வழங்கப்பட்ட வசதிகளை கருத்தில் கொண்டு வீட்டு வாடகையை நிர்ணயம் செய்வதற்கு வீட்டுக் குழு கவனம் செலுத்தியுள்ளது. | |
| (இ) | 2016 மார்ச் 01 ஆம் திகதிய 04/2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் 4.2 ஆம் பந்தி | முதுகலை, வெளவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் கற்கைநெறி பிரிவினால் நடாத்தப்படும் 06 வெளிவாரி பட்டப்படிப்பு கற்கைநெறிகள் மற்றும் முதுகலை கற்கைநெறிகளுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான கடிதங்கள் ஏற்கனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையால் அறிமுகப்படுத்தப்பட்ட பொது | நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு | தொடர்ந்துவரும் ஆண்டில் இந்த காலதாமதங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டல்களின் 6.5.1 ஆம் பந்தி. | சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் 03 மாதங்கள் தாமதத்திற்குப் பின்னர் 2022 யூன் 03 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | | எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2014 பெப்ரவரி 11 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4 (ii) ஆம் பந்தி | ஆராய்ச்சி முன்மொழிவு தொடர்பான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் முன்னேற்றம் அடங்கிய இடைக்கால ஆராய்ச்சி அறிக்கை, ஆராய்ச்சி தொடங்கியதிலிருந்து 06 மாதங்களுக்குள் ஆராய்ச்சி முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டில் 05 விரிவுரையாளர்களால் தொடங்கப்பட்ட ஆராய்ச்சிகளின் முன்னேற்றம் ஆராய்ச்சி முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது இறுதி ஆராய்ச்சி அறிக்கைகள் ஆராய்ச்சி முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 47,292,364 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 46,170,652 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 1,121,712 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. திறைசேரி நிதியேற்பாடு ரூபா 2,048,008 ஆலும் முதலீட்டு வட்டி ரூபா 1,373,904 ஆலும் நானாவித வருமானம் ரூபா 1,853,398 ஆலும் குறைவடைந்தமை மற்றும் பல்வேறு மீண்டெழும் செலவினம் ரூபா 1,448,058 ஆல் அதிகரித்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிறுவன வள திட்டமிடல் முறைமையை நிறுவுவது தொடர்பான ஒப்பந்தத்திற்காக தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களின் பிரகாரம் மென்பொருள் அபிவிருத்தி செயற்திட்டங்களுடன் தொடர்புடைய வருங்கால | தகவல் தொழில்நுட்ப முறைமை எதிர்வரும் 03 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படவுள்ளதுடன் முறைமை நிறுவப்பட்ட பின்னர் தொகுதிகளில் (modules) உள்ள பிழைகள் திருத்தப்பட்டு தகவல் | கேள்வி நிபந்தனையின் பிரகாரம் கேள்விதாரர் தெரிவுசெய்யப்பட்டு உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்து சொத்துக்களை செயற்திறனாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | கேள்விதாரரின் வருடாந்த புரள்வு ரூபா 50 மில்லியனுக்கும் அதிகமாக இருக்க வேண்டும். எனினும் அந்தத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத கேள்விதாரர் ஒருவர் வருங்கால கேள்விதாரராகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். உடன்படிக்கையின் பிரகாரம் 2018 மே 31 அளவில் ரூபா 8 மில்லியன் மொத்த பெறுமதியான ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2022 மார்ச் 31 அளவில் ரூபா 4 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த அதேநேரம் இந்த முறைமை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப முறைமையை பல்கலைக்கழகம் கையேற்று பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும். | வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 முதல் 2021 வரையான காலப்பகுதியில் பேராசிரியர் பிக்கு ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட 02 ஆராய்ச்சிகளுக்காக அந்த பிக்குவிற்கு ரூபா 1,797,440 படி செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த ஆராய்ச்சிகள் தொடர்பான இறுதி அறிக்கைகள் 2022 மே 05 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஏப்ரல் 27 ஆம் திகதி நடைபெற்ற ஆராய்ச்சி முகாமைத்துவக் குழுவில் இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது, இறுதி அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உரிய பிக்குவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதுவரை இந்த பிக்குவிற்கான ஆராய்ச்சிப் படிகளின் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. | ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கைகளை முறையாகப் பெற்றுக்கொள்வதற்கும் இறுதி அறிக்கைகள் வழங்கப்படாத பட்சத்தில் படிகளின் கொடுப்பனவு தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 1996 இன் 26 ஆம் இலக்க புத்தஸ்ரவக்க பிக்கு பல்கலைக்கழக சட்டத்தின் 3(V) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பௌத்த கலாச்சாரம் மற்றும் விழுமியங்களை மேம்படுத்துதல் அந்தச் சட்டத்தின் பிரிவு 3(1) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புத்த பகவானின் போதனைகளுக்கு இணங்க பிக்கு மாணவர்களுக்கு பயிற்சியளிக்கும் நோக்கத்திற்கு இணங்க நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் மேற்படி நோக்கங்களுக்கு முரணாக முதுகலை பட்டம், வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் கற்கைநெறி பிரிவு ஜோதிடத்தில் உயர் சான்றிதழ் கற்கைநெறியை நடாத்தி வந்தமை அவதானிக்கப்பட்டது. | ஜோதிடம் இலங்கை பௌத்த கலாசாரத்தில் உள்ளடங்கிய ஒன்று என்பதால், ஜோதிடத்தில் உயர் சான்றிதழ் கற்கைநெறியானது மூதவை மற்றும் பேரவையின் அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இது பல்கலைக்கழகத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்களுக்கு இணங்கியுள்ளது. | இச் சட்டத்தின் 3(V) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பௌத்த கலாச்சாரம் மற்றும் விழுமியங்களை மேம்படுத்துவதற்கான நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் போது சட்டத்தின் 3(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புத்த பகவானின் போதனைகளின் பிரகாரம் பிக்கு மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதன் நோக்கம் பின்பற்றப்பட வேண்டும். |

## 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 80,843,406 மொத்தக கிரயத்தில் 2020 சனவரி 14 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 25 வெளிநாட்டு மாணவர்களுக்கான விடுதி 2022 மார்ச் 03 வரை 02 ஆண்டுகளுக்கும் மேலாக விளைவற்றிருந்ததுடன் கட்டிடத்தில் நிறுவப்பட்ட ரூபா 3,411,000 பெறுமதியான மின்சாரம் மற்றும் பொருத்துதல்களின் உத்தரவாதக் காலப்பகுதி பயன்படுத்தப்படாமல் காலாவதியாகியிருந்தது. | நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலைமை இந்த நிலைமைக்கு பங்களித்திருந்த போதிலும் 2020/2021 கல்வியாண்டில் பல்கலைக்கழக நுழைவுக்கு தகுதி பெற்ற மூன்று வெளிநாட்டு மாணவ பிக்குகள் நேர்முகப்பரீட்சைக்கு தாமாகவே சமூகமளித்திருந்ததுடன் ஒரு பிக்கு மாத்திரமே பதிவு செய்துள்ளார். | சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |